செய்தி வெளியீடு எண்–530 நாள் : 17.08.2007

# செய்திக் குறிப்பு

## அனைத்து பேரூராட்சிகளுக்கும் கணினி. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில் 11.04.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் "பேரூராட்சிகளில் கணினி மயமாக்குதலை வலுப்படுத்தவும், கணினி சேவைகளை வழங்குவதிலான தரம் மற்றும் தகவல் மேலாண்மை சேவையை மேம்படுத்திடவும் 561 பேரூராட்சிகளுக்கும் தேவையான கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள், அகல வரிசை (Broad Band) வசதியும் மற்றும் பணியாளர்களுக்கு கணினி பயிற்சியும் வழங்கப்படும்." என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மத்திய அரசின் தகவலியல் தொழில் நுட்பத் துறையின் வாயிலாக தமிழகத்திலுள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் மின்னணு சேவை வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 561 பேரூராட்சிகளுக்கும் தலா ஒரு கணினியும், பேரூராட்சி மண்டல அலுவலகங்கள் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர்அலுவகத்திற்கு மொத்தம் 582 கணினிகள் ரூபாய் 4.00 கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தினால் பொது மக்கள் பேரூராட்சி பற்றிய சேவை தகவல்களை எளிதாக பெறுவதற்கு வழிவகுப்பதுடன் பேரூராட்சிகளில் நடைபெறும் பணிகளை கண்காணித்து விரைவுபடுத்திடவும், பொதுமக்கள் சேவையை நிறைவாக செய்திடவும், ஒப்பந்தப்புள்ளி கோருதல், தகவல் வலையத்தில் செய்திகள் சேர்ப்பித்தல், நேரடி தகவல் பரிமாற்றம் போன்ற பணிகள் சிறப்பாக செயல்படுத்த வழிவகை செய்கிறது.

கணினி வழங்குவதற்கான ஏற்பாடுகள் பேருராட்சிகள் நிர்வாகம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தேசிய தகவலியல் தொழில் நுட்பத் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 375 கணினிகள் 17.08.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கணினி வழங்குதல் நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களை சேர்ந்த பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் கணினிகளை நேரில் வந்து பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு.கே.தீனபந்து,இ.ஆ.ப., தகவல் தொழில் நுட்ப துறைச் செயலர் டாக்டர் சி.சந்திரமௌலி,இ.ஆ.ப., பேரூராட்சிகள் இயக்குநர் டாக்டர் கே.கோபால்,இ.ஆ.ப., மின்னணு நிர்வாகத் துறை இயக்குநர் திரு.சுனில் பாலிவால், இ.ஆ.ப.., தேசிய தகவலியல் மைய சென்னை மண்டல துணைத்தலைவர் திரு.ஏ.மோகன் மற்றும் பேரூராட்சிகள் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.